மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# ஐங்குறுநூற்றில் வேளாண் புழங்கு பொருட்கள்

**தா.இரா.இராமலெட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சிராப்பள்ளி

பன்னெடுங்காலமாய்ச் சிறந்த வாழ்வியல் கூறுகளைக்கொண்டு தமிழ்மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்வியல் சிறப்புகளை இக்கால மாந்தரும் அறிந்துகொள்ள அவர்கள் வாழ்ந்த காலத்தில் தோன்றிய இலக்கியங்கள், நாணயங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், சிற்பங்கள் ஆகியவை துணைபுரிகின்றன. அவற்றுள் முதன்மை ஆதாரமாக இலக்கியங்கள் திகழ்கின்றன. அவை தோன்றிய காலகட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு அவற்றினைச் சங்க இலக்கியங்கள் என்றும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள் என்றும் பகுப்பர். அப்பகுப்பினுள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்கள் எனப்படுகின்றன. நற்றிணை, குறந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியன எட்டுத்தொகை நூல்களாகும். இத்தொகை நூல்களுள் மூன்றாவதாகக் குறிப்பிட்டுள்ள ஐங்குறுநூறு படைப்பில் மக்களின் தொழில்கள், அவர்கள் புழங்கிய பொருட்கள் பற்றிய பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. அந்த அடிப்படையில் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் உணவுத் தேவையை நிறைவுசெய்யும் வேளாண்மைத் தொழிலில் பயன்படுத்தப்பட்ட புழங்கு பொருட்களைப் பற்றிக் குறிப்பிடும் கட்டுரையாக இது அமைகிறது.

**ஐங்குறுநூறு**

ஐங்குறுநூறு, திணைக்கு 100 பாடல்களைக் கொண்டு ஐந்திணைக்கும் 500 பாடல்களைக் கொண்டுள்ளது. ஐங்குறுநூறு மூன்றடி முதல் ஆறடி என்ற வரையறையைக் கொண்ட நூல். ‘ஐந்து சிறந்த சிறு நூல்கள் சேர்ந்த ஒரு நூல்தான் இந்த ஐங்குறுநூறு. ஐந்தும் அகப்பொருட்செய்திகளைக் கூறுவதால் ஒரே நூலாக்கப்பட்டது’.

**வேளாண்மை**

வேள்+ஆள்+மை= வேளாண்மை. வேள் என்ற சொல்லுக்கு மண் என்றும் வேளாண்மை என்னும் சொல்லுக்கு மண்ணை ஆளுதல் என்றும் பொருள். ‘வேளாண்மை’ என்னும் சொல் பொதுவாகக் கொடை, ஈகை எனும் பொருளைக்

குறிக்கும். வேளாண்மை என்பதற்கு "உபகாரம், ஈகையும் விளம்பும்" (ப,264) என்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகராதி பொருளுரைக்கிறது.[2] வேட்டையாடித் தமக்கான உணவைத் தேடிக்கொண்டிருந்த மனிதன், அதனைத் தவிர்த்து தானே உணவை உற்பத்தி செய்ய ஆரம்பித்தபோது, வேளாண்மை தோன்றியது. இவ்வேளாண்மை நிலத்தின் தன்மையைப்பொறுத்து நன்செய் வேளாண்மை என்றும் புன்செய் வேளாண்மை என்றும் பகுக்கப்படுகிறது. சங்ககால நில அமைப்புகளான மருதம், நெய்தல் நிலங்களில் நன்செய் வேளாண்மையும் குறிஞ்சி, முல்லை நிலங்களில் புன்செய் வேளாண்மையும் நடந்தேறின. இவ்வேளாண் தொழில் சிறக்கப் பல்வேறு வகையான பொருட்களை மக்கள் புழங்கினர்

**புழங்கு பொருட்கள்- விளக்கம்**

ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு சமூகத்தினர் தம்வாழ்வுக்காகப் பயன்படுத்தி வந்த பொருட்களே புழங்கு பொருட்கள். அவ்வாறு அவர்கள் புழங்கிய பொருட்களே அவர்கள் வாழ்வின் நிலைப்பாட்டினை உணர்த்துகின்றன.

புழங்குதல் என்பதற்குக் "கையாளுதல், பழகுதல்" எனத் திருமகள் தமிழகராதி பொருளுரைக்கிறது[3].

"பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள்" என்கிறார் பக்தவத்சல பாரதி[4] "இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப் படைப்புகளாகவும் (Artitacts) மாற்றிக்கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு என்றும் மானுடக் குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்கு பொருள் சார்ந்த கலைத்தொழில் வேலைப்பாடமைந்த பொருட்களும் புழங்கு பொருள் பண்பாட்டில் அடங்குகின்றன" என்று குறிப்பிடுகின்றார் லூர்து5 (எடுத்தாளப்பட்டது ;ரெஜித்குமார். புழங்கு பொருள் பண்பாடு,ப. 2).

ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டினை மற்றொரு குழுவினரோ அல்லது காலம் கடந்த பின்னர் அதே குழுவினரோ அறிந்து கொள்வதற்கு இப்புழங்கு பொருட்கள் துணைபுரிகின்றன.

"மக்கள் தங்களின் அன்றாடத் தேவைக்காக உருவாக்கப்பட்ட பொருட்கள் மற்றும் கலைப்பொருட்கள், உணவுப் பழக்கவழக்கம், சடங்கியல் சார்ந்த பொருட்கள் இவற்றை உருவாக்கும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்கருவிகள் அவற்றை விலை நிர்ணயம் செய்யும் முறை ஆகியவை ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களின் அல்லது ஒரு சமூகத்தினரின் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமையுமானால் அவற்றைப் புழங்கு பொருட்கள் எனக்கொள்ளலாம்" என்கிறார் ரெஜித்குமார் 6

இப்புழங்குபொருள் பண்பாட்டைப் பொருத்தவரையில் பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன? எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொருத்தே புழங்குபொருள் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஐங்குறுநூற்றில் வேளாண் புழங்கு பொருட்களான ஏர், வட்டி, அம்பணம், தட்டை, குறுந்தடி, பொய்ப்புலி போன்ற பொருட்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

**ஏர்க்கலப்பை**

வேளாண்மைக்குப் பயன்படும் முக்கியமான உழவுக்கருவி ஏர்க்கலப்பை. இது நிலத்தைக் கீறி உழுவதற்கு உற்ற துணையாக இருக்கிறது. இது மரத்தினால் செய்யப்படுவது. இதன் முனையில் 'கொலு' எனப்படும் கூரிய இரும்புக்கருவி பொருத்தப்பட்டிருக்கும். மரத்தினாலான பொருட்களைச் செய்ய அம்மரங்களைக் காடுகளிலிருந்து வெட்டி வருவர்.

"இவ்வாறு காடு என்னும் பகுதியிலிருந்து பெறும் மூலப்பொருட்களும் விஸ்வகர்மாக்களால் தச்சுக்கழித்தல், திருஷ்டி கழித்தல் போன்ற சடங்குகள் செய்து, காட்டுப் பகுதிகளில் வாழும் தீய ஆவிகளைப் பிரித்த பின்னர் பயன்படுத்துவோருக்குத் தரப்படுகின்றன.[7] இத்தகைய ஏர்க்கலப்பையைப் பூட்டி உழவர்கள் கார்கால மழை பொழிந்தவுடன் தத்தம் நிலத்தில் உழுகின்றனர். அதனால் அப்புனம் அழகாகக் காட்சியளித்தது. ஏர்க்கலப்பை வேளாண்புழங்கு பொருளாக இருந்தமையை,

கார் கலந்தன்றால் புறவே பல உடன்
ஏர் பரந்தனவால் புனமே ஏர் கலந்து
தாது ஆர் பிரசம் மொய்ப்ப,
போது ஆர் கூந்தல் முயங்கினள், எம்மே. (ஐங்.417)

என்று ஐங்குறுநூற்றுப்பாடல் குறிப்பிடுகிறது.

**வட்டி**

"வட்டி" என்பது வட்டவடிவாய் அகன்ற வாயினை உடைய பின்னப்பட்ட கூடை வகையாகும். 'வட்டி என்பது கடகப்பெட்டி. இஃது உட்புறம் பனங்குருத்தாலும், வெளிப்புறம் அதன் அகணியாலும் செய்யப்படும். இது பாணரும் கடையரும் மீனும் ஊனும் பெய்து வைத்தற்குப் பயன்படுவதேயன்றி உழுதொழிலோர் விதை முளை வைத்தற்கும், மகளிர் பூப்பெய்து வைப்பதற்கும் பயன்படும்' என்று ஔவை சு. துரைசாமிபிள்ளை குறிப்பிடுகிறார்.[8]

ஐங்குறுநூற்றில் கூரிய பற்களையுடைய பாணர்குலப்பெண் கொடுத்த இனிய சுவையுடைய கெடிற்றுமீனை அகன்ற வட்டி நிறையப் பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக மருதநிலத்தலைவி தம்வயலில் விளைந்த பயிற்றினை வட்டி நிறையக் கொடுத்தாள் என்ற செய்தி பதிவாகியுள்ளது,

"முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த
அகன்பொரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர (ஐங்.47.1–3)
வலை வல் பாண்மகன் வால் எயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர" (ஐங்; 48.1–3)

என்ற பாடலில் வலை வீசுதலில் வல்லமை பெற்ற பாணன் கொண்டு வந்த வரால் மீன்களை மருத நிலத்தலைவிக்குக் கொடுத்துவிட்டு, அதற்கு ஈடாகக் கடந்தாண்டு விளைந்த வெண்ணெல்லை வட்டி நிறையப் பெற்றுக் கொள்கிறாள் பாண்மகள். இதன்வழி வட்டி என்பது வேளாண்மக்களின் முக்கியப் புழங்குபொருளாகப் பயன்பட்டமை புலனாகிறது.

**அம்பணம்**

அம்பணம் மரக்கால் எனப்படும் ஒரு முகத்தல் அளவைக்கருவியாகும். இக்கருவி மரத்தால் செய்யப்பட்டு சுற்றிலும் இரும்பு அல்லது செம்பினால் செய்த உறை போடப்பட்டு இருக்கும். முற்காலத்தில் நெல் முதலிய தானியங்களை அளப்பதற்கு இதனைப் பயன்படுத்தினர்.

'அம்பணமென்றது பட்டமணிந்த வாயையும் பரிய அரையையுடைய அம்பண அளவை ஆவது அளக்கும் பறை முதலியன என்றும்' தரகர் அளக்கும் மரக்கால் என்றும் அடியார்க்கு நல்லார் பொருள் கூறுகிறார்.[9]

"அம்பணத்து அன்ன யாமை ஏறி" (ஐங்.43;1)

என்ற ஐங்குறுநூற்றின் அடி, ஆமையின் முதுகு தானியங்களை அளக்க உதவும் அம்பணத்தைப் போல வளைந்திருக்கிறது என்று குறிப்பிடுவதன்மூலம் அம்பண அளவை பயன்பாடு இருந்தமை புலனாகிறது.

**தட்டை**

தட்டை என்பது தினைப் புனங்களில் கிளியை விரட்ட உதவும் கருவியாகும். மூங்கிற்கழியின் துண்டனத்தைப் பிளந்து இதனைச் செய்வர். இதனைத் தட்டி ஒலி எழுப்புவதால் தட்டை எனும் பெயர்பெற்றது. விளைந்திருக்கும் தினைப்பயிரைக் கவர வரும் மயில், கிளி போன்ற பறவைகளை விரட்ட இக்கருவியைத் தட்டி ஒலி எழுப்புவர்.

குளிரும் தழலும் தட்டையும் மூன்றும்
கிளி கடி கருவி எனக் கிளத்தினரே (ப.259)

என்று சேந்தன் திவாகர நிகண்டு கிளிகடி கருவிகளாகக் குளிர். தழல், தட்டை ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது.[10] ஐங்குறுநூற்றிலும்,

பின் இருங்கூந்தல் நல்நுதல் குறமகள்
மென் தினை நுவணை உண்டு, தட்டையின்
ஐவனச் சிறுகளி கடியும் நாட (ஐங்.285: 1–3)

என்ற அடிகளில் பின்னப்பட்ட அழகிய கரிய கூந்தலையுடைய குறமகள், தங்களுடைய தினைப்புனத்தில் தினையைக் கொத்தவரும் சிறுகிளிகளை விரட்டுவதற்காகத் தட்டையைக் கொண்டு ஒலி எழுப்பி விரட்டினாள் என்ற செய்தி பெறப்படுகிறது.

**குறுந்தடி-குணில்**

குணிலா என்பது குறுந்தடியாகும். மரத்தில் பழுத்திருக்கும் பழங்களை கோவலர் உதிர்க்க, முரசறைவோன் முரசறைய என இக்குறுந்தடியைப் பயன்படுத்துவர். குணில்

என்பதற்குக் "குறுந்தடி, பறை அடிக்கும் கடிப்பு" என்று சங்க இலக்கியச் சொல் தொடர் விளக்க அகராதி பொருள் கூறுகிறது.[11]

பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊர (ஐங்.87 1–3)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலடி மரத்தில் பழுத்திருக்கும் மாம்பழங்களை உதிர்க்கக் கரும்பினைக் குணிலாகப் பயன்படுத்தியமையை குறிப்பிடுகிறது.

**பொய்ப்புலி**

விளைநிலத்தில் பயிரிடப்பட்டிருக்கும் பயிரினைப் பல்வேறு விலங்குகளும் பறவையினங்களும் கவர்ந்து தின்ன வரும். அவைகளிடமிருந்து பயிர்களைக் காக்க வேளாண்மக்கள் பல்வேறு உத்திகளைக் கைக்கொள்வர். அவற்றுள் சோளக்காட்டு பொம்மை எனப்படும் பொய் உருவமும் ஒன்று. மனிதனைப்போன்ற உருவத்தினைச் செய்து வயலில் வைத்துவிடுவர். இவ்வாறு வைப்பதால் பயிரினங்களைக் கவர வரும் விலங்கினங்களும் பறவையினங்களும் இவ்வுருவத்தைக்கண்டு வயலில் காவற்காரர் இருப்பதாகவோ அல்லது ஏதேனும் பெரிய உருவம் இருப்பதாகவோ எண்ணி அஞ்சி ஓடிவிடும்.

ஐங்குறுநூற்றிலும் குறிஞ்சி நிலத்தில் குறவர்கள் விதைத்துள்ள தினைப்பயிரைக்கவர வரும் விலங்குகளிடமிருந்து பாதுகாக்க, கழற்சிக்காயைக் கண்களாகப் பொருந்திப் பெண் புலியின் உருவத்தைச் செய்து தங்கள் விளைநிலங்களில் நிறுத்தி வைத்துப் பயிரினைக் காத்த செய்தினை,

கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉ
புன்புலம் வித்திய புனவர் (ஐங்246 2–3)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

**கரும்புச்சாறு பிளியும் எந்திரம்**

பழந்தமிழர் இரும்பின் பயன்பாட்டை அறிந்த பின்னர் அதனைப் பல்வேறு வகைகளிலும் பயன்படுத்தினர். அதன் மூலம் தங்களின் தேவைகளை நிறைவு செய்து கொண்டனர். இரும்பினைக்கொண்டு பல்வேறு வேளாண் கருவிகளையும் தயார்செய்தனர். செல்வ வளம் மிக்க பாண்டிய நாட்டின் வயல்களில் கரும்பு, நெல் போன்ற பணப்பயிர்கள் நன்கு விளைந்தன. வயலில் விளந்த கரும்பினை நசுக்கிச் சாறு பிழிவதற்கெனத் தனியாக எந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன என்பதை.

கரும்பின் எந்திரம் களிற்று எதிர் பிளிற்றும் (ஐங்.55.1)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் வரிகள் குறிப்பிட்டுள்ளன.

**முடிவுகள்**

புழங்கு பொருட்கள் அவற்றைப் பயன்படுத்திய மக்களின் வாழ்க்கை நிலையைப் புலப்படுத்துகின்றன. ஒரு காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட புழங்குபொருட்கள் எல்லாக்

காலத்திலும் பயன்படுத்தப்படவில்லை. எனவே அவை மாற்றம் பெற்றோ, வேறு பொருளாகவோ அல்லது வழக்கொழிந்தோ போய்விடுகின்றன.

முற்காலத்ததில் பயன்படுத்தப்பட்டு வழக்கொழித்து போன பல்வேறு பொருட்களும் காலமாற்றத்தால் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. புழங்கு பொருட்கள் அவை பயன்படுத்தப்பட்ட காலகட்டத்தினையும் அக்காலத்தொழில்நுட்ப முறையினையும் புலப்படுத்துகின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. சாமி. சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.22.
2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகராதி, ப.264.
3. திருமகள் அகராதி,ப.721.
4. பக்தவத்சல பாரதி. தமிழர் மானிடவியல்,ப.309.
5. த.ரெஜித்குமார், புழங்கு பொருள் பண்பாடு, ப,2,
6. மேலது, பக்.2–3.
7. பக்தவத்சல பாரதி, மு.நூ.இப.315.
8. ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் உரையும். ப.159.
9. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம், 14.209–10.
10. சேந்தன் திவாகர நிகண்டு.ப.259.
11. சங்க இலக்கியச் சொல்தொடர் விளக்க அகராதி, ப.3677.